பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 13 திங்கட்கிழமை 29.11.2021 கதிர் 24

### இனி இது ரகசியம் அல்ல!

'விநாச காலே விபரீத புத்தி' என்பார்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றும் கூறுவர்.

கோட்டா ஆட்சிப் பீடத்தின் மனித உரிமை மீறல் நிலைமை சர்வதேசத்தின் கடும் அதிருப்திக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாகியிருக்கும் நிலையில் பக்கம்02 »

# நினைவேந்தலுக்கு முட்டுக்கட்டை ராணுவ ஆட்சிக்கு எடுத்துக்காட்டு!

## எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்



மாவீரர் நாளான நேற்றுமுன்தினம் வடக்கு, கிழக்கில் அரச படைகள் மேற்கொண்ட அராஜகங்களை எதிர்க்கட்சிகள் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

ஆயுதப் போராட்டத்தை மீள ஆரம்பிக்க அல்ல எனத் தெரிந்த நிலையிலும், இதே நினைவுகூரல் உரிமைகள் சிங்களம் தெற்குக்கு வழுங்கியுள்ளது, ஆனால், வடக்கு, கிழக்குக்கு இன்னமும் வழுங்கவில்லை. மரணித்தோரை நினைவு கூரல் உலகளாவிய உரிமை என்ற நிலையிலும், இங்கே நிகழும் நினைவுகூரல்களைச் சகித்துக் கொள்ள முடியாமை, இத்தனை காலம் கடந்தும், இலங்கையில் சிங்கள – தமிழ் இடைவெளி வெகு அகலமாகத்தான் இன்னமும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். ☞10

## ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம்; கைதான 3 சிப்பாய்களுக்கும் பிணை!

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் பகுதியில் சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கைதான 3 இராணுவச் சிப்பாய்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று ☞2

## மேலும் 27 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 27 பேர் சாவடைந்துள்ளனர். ☞2

## நேற்று மட்டும் 742 பேருக்கு கொரோனா

இலங்கையில் நேற்று 742 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் ☞10

## நல்லூரில் பூஸ்டர் தடுப்பூசி

நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ☞10

## குடாநாட்டில் தொடர்ந்தும் கரை ஒதுங்கும் உடல்கள்

### இதன் மர்மம்தான் என்ன?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வல்வெட்டித்துறை, மணல்காடு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரு ஆண்களின் உடலங்கள் சிதைவடைந்த நிலையில் கரை ஒதுங்கிய ☞2



## தமிழர்களின் ஒற்றுமை முயற்சிக்கு சித்தர் தலைமை தாங்க வேண்டும்!

### இப்படி வேண்டுகோள் விடுக்கின்றார் மாவை



யாழ்ப்பாணம், நவ. 29

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ☞2



## எந்நேரமும் நாடு முடக்கப்படலாம்

### ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் தேவை ஏற்பட்டால் நாடு முடக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் ☞10

## வெளியேறுவோர் வெளியேறட்டும்; உள்நுழைய ஒரு குழு தயார் நிலை

### அரசு அதிரடி அறிவிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான ஆளும் கட்சியில் இருந்து எவரேனும் வெளியேறினால் அதற்கு எந்தத் தடையும் இல்லை.

–இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசிலிருந்து எவரேனும் வெளியேறினால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக எதிர்க்கட்சியில் இருந்து ஒரு ☞2



## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும்!

### வடக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே. வலியுறுத்து



ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை இந்த அரசு உறுதிசெய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ☞10

## 'பட்ஜட்'டை சு.க. ஆதரிக்குமா?

வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதனை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'நானாகவே கெட்டழிகின்றேன் பார்.' என்று சவால் விட்டு நடந்து கொள்வது போல அது செயற்படுகின்றது.

இலங்கைப் பொலிஸார் சட்டத்துக்கு முரணான படுகொலைகளில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக் காரணமாக, இலங்கைப் பொலிஸாருக்கு இனி எந்த நிபுணத்துவப் பயிற்சியும் வழங்குவதில்லை என்று அண்மையில்தான் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் முடிவு செய்திருந்தது.

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்காக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பெரும் நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கி இருக்கின்றது.

இந்த நிலையில் பாதாள உலகக் கோஷ்டிகளையும் போதை வஸ்துக் கும்பல்களையும் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை 'என்கவுண்டர்' என்ற பெயரில் போட்டுத் தள்ளும் நடவடிக்கை கோட்டா அரசில் சர்வசாதாரணமாக நடைபெற்று வருவது, சர்வதேச மனித உரிமை அமைப்புக்களையும், மனித உரிமை ஆர்வலர்களையும், கடும் அதிர்ச்சிக்குள்ளும் விசனத்துக்குள்ளும் சீற்றத்துக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகின்றது.

கைது செய்யப்பட்ட 'டிங்கர் லஸந்த' என்ற சந்தேக நபர் நேற்று முன்தினம் பொலிஸாரால் போட்டுத் தள்ளப்பட்ட சம்பவமும், அதை ஒட்டி நடந்த நிகழ்வுகளும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

களுத்துறை குற்றப்பிரிவு பொலிஸாரால் 'டிங்கர் லஸந்த' கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து அவரின் சட்டத்தரணி சஞ்சய் ஆரியதாஸா, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அவசர முறையீடு ஒன்றைச் செய்தார்.

தனது கட்சிக்காரரான சந்தேக நபரை, அவர் மூலம் ஆயுத மீட்பு என்று கூட்டிச் சென்று போட்டுத் தள்ள திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகத் தமக்கு நம்பகரமாகத் தகவல் கிடைத்திருக்கின்றது என்றார் அந்த சட்டத்தரணி.

இதனை அடுத்து, அவரது கவலையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மின்னஞ்சல் மூலமும், எஸ்.எம்.எஸ். மெஸேஜ் மூலமும் பொலிஸ் மா அதிபருக்குத் தெரியப்படுத்தினார்.

ஆயுதங்களை மீட்பது என்ற பெயரில் அவரை வெளியே கூட்டிச் சென்று, அங்கு நடந்த துப்பாக்கிச் சமரில் அவர் கொல்லப்பட்டார் என்று காட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக அவரின் சட்டத்தரணி தெரியப்படுத்தியுள்ளார் என்று வெளிப்படையாக பொலிஸ் மா அதிபருக்கு எழுத்தில் முன் அறிவித்தல் கொடுத்தார் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்.

அந்த மின்னஞ்சலை அவர் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி அடுத்த நாள், சொல்லி வைத்தால் போல அதே பாணியில் டிங்கர் லஸந்த பரலோகம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்.

எதையும் சட்ட விரோதமாகச் செய்வதில் கோட்டா அரசுக்கு நிகர் ஏதுமில்லை. ஆனால் இத்தகைய மனித உரிமைக் கொடூரங்களை சாதாரணமாகவே இழைத்து வரும் கோட்டா அரசு, அதற்காகப் பெரு விலையைக் கொடுக்க நேரும். அதற்குக் காலம் தொலைவில இல்லை என்பது நிச்சயம்.

★ ★ ★

காஸ் சிலிண்டர் வெடிப்புகள் தொடர் கதையாகத் தொடர்கின்றன. பிரச்சினை காஸில்தான் என்கின்றார்கள்.

சிலிண்டர் வெடிப்பதை விட, காஸ் அடுப்புகள்தான் அதிகம் வெடிக்கின்றன. நேற்று சுன்னாகத்திலும் மேல் மாகாணத்தில் ஓரிடத்திலும் இதே வெடிப்புகள்.

இன்று எங்கேயோ....? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

★ ★ ★

தெற்கில் அரசியல்வாதிகள் பலரும், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் புதுடில்லி விஜயத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் திட்டம் எதனையும் புதுடில்லியில் இருந்து அவர் பெற்று வருவார் என்ற நப்பாசை தான் ஆளும் தரப்பினருக்கு.

பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான நேரத்தைப் பெறுவதற்கு பஸில் காத்திருக்கின்றாராம். அது உறுதிப்படுத்தப்பட்டதும் அவர் புதுடில்லி பயணமாகி விடுவாராம். அது பெரும்பாலும் இரண்டு, மூன்று நாள்களில் நடக்கக் கூடும்.

★ ★ ★

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பாகத் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவரின் அவதானிப்பு இது:–

வழமையாக மாவீரர் தின அனுஷ்டானங்களுக்கு எதிராக முற்கூட்டியே கெம்பி எழும் சிங்கள தேசிய அமைப்புகள் பலவும் இம்முறை வழமைக்கு மாறாக வாய் பொத்தி அமைதி காத்தன. எந்த ஆரவாரக் குமுறல்களும் அப்பக்கத்தில் இருந்து வரவேயில்லை. – என அவர் சுட்டுகின்றார்.

அது மட்டுமல்ல, சாகும் போது பயங்கரவாதி என சித்திரிக்கப்பட்ட றோஹண விஜேவீரவையும் அவரின் ஏனைய தோழர்களையும் நினைவேந்தும் உரிமை ஜே.வி.பியினருக்கு வழங்கப்பட்டிருக்கையில் புலிகளை நினைவு கூரும் உரிமையை ஏன் தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடாது என்று கேட்கும் கருத்தைத் தென்னிலங்கையில் பலரும் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளனர்.

பேரினவாத வெறிப்போக்குச் சிந்தனை தொடர்பில் சிறிதும் மாற்றம் ஏற்படுகின்றதோ...? இலக்கணம் மாறுதோ...? தெரியவில்லை.

– மின்னல் –

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழீழ மக்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் சதானந்தனின் நினைவுதின நிகழ்வில் பங்கெடுத்து உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் இன்றைக்கு மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் என்றுமில்லாதவாறு நெருக்கடிமிக்க காலமாக இன்றைய நிலைமை இருக்கின்றது.

இங்கு பேசிய எல்லோருடைய பேச்சுக்களும் நாங்கள் இன்னும் சரியான இடத்திற்கு வந்து இருக்கவில்லை என்பதையும், இன்னும் தமிழ் மக்களுடைய பிரச்சினை தொடர்பாக சரியான ஒரு கோட்டிலே நாங்கள் பயணிக்கவில்லை என்பதையும் மிகமிக தெளிவாக கோடிட்டு காட்டுகின்றன.

அதற்காக நானும் பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது. ஏனென்றால் இந்த இனத்துக்காக மிக நீண்டகாலமாக உழைத்தவன் என்கிற ரீதியிலும் மிகப் பெரிய பாரம்பரியமுடைய கட்சி ஒன்றினது தலைவர் என்கிற ரீதியிலும், நானும் அதற்கான பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கிறேன்.

அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு எந்த பக்கம் திரும்பினாலும் ஒன்றுபட்ட தரப்பாக, ஒற்றுமை பட்ட தரப்பாக, நாங்கள் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்கிற விடயம் இன்று நேற்றல்ல, மிக நீண்ட காலமாகவே பேசப்பட்டு கொண்டிருக்கின்றது.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த விடயம் இன்னும் கைகூடவில்லை.

ஆனால் அதற்காக நாங்கள் இதை கைவிட்டுவிட முடியாது. இதை கைகூட வைக்கின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டே ஆக வேண்டிய கட்டாயம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். அன்றைய நாள்களில், அதிலும் குறிப்பாக தமிழரசுக் கட்சி தமிழினத்தினுடைய தந்தை செல்வாவினுடைய தளபதியாக, தலைவர் அமிர்தலிங்கம் அவளுடைய தளபதியாக இங்கே இருக்கின்ற சித்தார்த்தனுடைய தந்தையார் தர்மலிங்கம் அவர்கள் அந்த நாள்களில் செயற்பட்டமையை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

கட்சியிலோ அல்லது கட்சிக்கு உள்ளேயோ ஒரு பிரச்சினை வருகிறது என்றாலும் சரி,கட்சிக்கு வெளியிலே ஒரு பிரச்சினை ஏற்படுகிறது என்றாலும் சரி, முதலில் சமாதானம் பேசுகிற ஒரு தூதராக இருந்தவர் தர்மலிங்கம்தான்.

அன்றைக்கு பெரிய தலைவர்களோடு விவாதிக்கும் விடயங்களை, அவர்களோடு விவாதித்து விட்டு, அதை இளைஞர்களாகிய எங்களோடு அன்றைய நாகளிலேயே பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரிடம் நாங்கள் கேள்விகளை எழுப்பும் பொழுது, மிகவும் கவனமாக அதை உண்மையாக அவர் எங்களுக்கு விளக்கமளித்து இருப்பதை நான் இன்றைக்கும் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன்.

அவருடைய வழித்தோன்றலாக இங்கே இருக்கக்கூடிய சித்தார்த்தன் அவர்கள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியான கால சூழ்நிலையில் நான் அவரிடம் வேண்டுகோளாக என்று கூட வைக்கலாம். உரிமையோடு நான் சொல்லுவேன். தமிழ் தேசிய இனத்தினுடைய நன்மை கருதி, சிதறிப் போயிருக்கக் கூடிய தமிழர் தரப்புக்களை ஒற்றுமைப் படுத்த வேண்டிய தேவை கருதி, அதனுடைய முக்கியத்துவம் கருதி, இன்றைக்கு சகல தமிழ் தரப்புகளையும் ஒன்றிணைக்கக் கூடிய ஆற்றல் அவரிடம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் எந்த ஒரு விடயத்தையும் நிதானமாகவும், பொறுப்பாகவும் செயற்படுத்தி, எல்லோரோடும் நட்போடு பழகக் கூடிய தன்மையும் இருக்கக்கூடிய சித்தார்த்தன் ஒற்றுமை முயற்சியை தலைமை தாங்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்று நான் அவரிடம் மிகவும் விநயமாக வேண்டுகோள் விடுக்கின்றேன். அதை அவர் நிறைவேற்ற வேண்டும். அதுதான் அவர் தமிழினத்திற்கு செய்யக்கூடிய ஒரு மாபெரும் கடமையாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். – என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவத்துள்ளார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் தமிழர் சமூக ஜனநாயக கட்சி செயலாளர் சிறிதரன் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

## மேலும் 27 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரசதகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 14 ஆண்களும், 13 பெண்களும் அடங்குகின்றனர்.

இதையடுத்து நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 305 ஆக அதிகரித்துள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் நேற்றும் ஆண் ஒருவரின் உடல் நெடுந்தீவில் கரை ஒதுங்கியுள்ளது.

மிகவும் சிதைவடைந்த நிலையில் கரையொதுங்கிய இந்தச் சடலமும் யாருடையது என்பது தொடர்பில் நேற்றிரவு வரையில் அடையாளம் காணப்படாமையால் பெரும் சந்தேகம் நிலவுகின்றது.

நேற்று இந்தச் சடலம் எந்தவொரு ஆடையும் இன்றியே கரை ஒதுங்கியுள்ளது.

இந்த உடல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வல்வெட்டித்துறை மற்றும் மணல்காடுப் பகுதிகளில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய இரு உடல்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள், நேற்று முற்பகல் கைதுசெய்யப்பட்ட நிலையில், விசாரணைகளின் பின்னர் பிற்பகல் வேளையில் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் மேற்படி சுயாதீன ஊடகவியலாளர், நேற்றுமுன்தினம் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பல்வேறு அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்கள் கண்டனம் வெளியிட்டு வருகின்றனர்.

(முன்னர் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)

## வெளியேறுவோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவினர் அரசுடன் இணைந்து கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

அரசிலிருந்து எந்த அணியேனும் வெளியேறினாலும் இந்த அரசு தனது மூன்றில் இரண்டு அதிகாரத்தை இழக்காது. அந்த இடைவெளியை எவ்வாறு நிரப்புவது என்பது அரசுக்குத் தெரியும்.

அரசுக்குள் இருந்துகொண்டு சிலர் விடுக்கும் மிரட்டல்களைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கின்றது – என்றார்.

## 'பட்ஜட்'டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் றோஹண லக்ஸ்மன் பியதாச இதனைக் கூறியுள்ளார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கப்பெறவில்லை. நாட்டில் அனைத்துப் பொருள்களினது விலைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன.

ஆளும் கட்சியில் உள்ள சிலர் தமது கட்சி உறுப்பினர்களைக் கட்சியை விட்டு வெளியேறும்படி பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

முக்கியமான தருணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உரிய தீர்மானங்களை எடுக்கும் – என்றார்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
"அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்."
16 2021
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF GRADUATE STUDIES
## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under-mentioned post from suitably qualified persons up to 10.12.2021.

1. Management Assistant – (ON CONTRACT)

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

**1.** Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at **One Sitting** with credit passes in
  i) Sinhala/ Tamil
  ii) English Language/ English Literature
  iii) Mathematics

**AND**

**2.** Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at **One Sitting** (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)

3. Preference will be given to those who possess the following;
  a. Fluency in English
  b. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from recognized institutes.
  c. Two years of experience in the use of computer application packages.

4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

* A monthly payment of Rs. 36,900 (fixed)
* This appointment is on fulltime contract basis for a period of six months, extendable as perneed.

**HOW TO APPLY:**

Applications should be on specified form (for each post) issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna** Collection Account Number: **970 0000 9000 0387.** A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied
for on its top left hand corner and send under registered post to reach us on or before **10.12.2021** to the following address.

**Assistant Registrar**
**Faculty of Graduates Studies,**
**University of Jaffna**
**Palaly Road,**
**Thirunelvely,**
**Jaffna**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**26.11.2021**


# யாழிலுள்ள பனை அபிவிருத்தி சபை கொழும்புக்கு மாற்றப்படமாட்டாது

## அரசு உறுதி



யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபை ஒருபோதும் கொழும்புக்கு மாற்றப்படாது. அது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலே யே தான் செயற்படும் என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சி.சிறிதரன், 'யாழ்ப்பாணம் மாவட்டத்திலே இருக்கின்ற குறிப்பாக வடக்கையும், கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்திச் சபையைக் கொழும்புக்கு மாற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனுடைய தலைவராக தற்போது முதன்முதலாக ஒரு சிங்களமொழி பேசுபவர் நியமிக்கப்பட்டுள்ளார்' என்று கூறினார்.

இதற்குப் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கும்போது –

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபை ஒருபோதும் கொழும்புக்கு மாற்றப்படாது. அது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே தான் செயற்படும்.

இதன் முதலீடுகளால் உங்கள் மாகாணத்துக்குத்தான் நன்மைகள் கிடைக்கும். அத்துடன் எனது அமைச்சுடன் தொடர்புபட்ட விடயங்களில் உங்களுக்கு ஏதாவது அநீதிகள் இடம்பெறுமானால் உடனடியாக எனக்கு அறியத் தாருங்கள். நான் உங்களுக்கு நீதி வழங்குவேன் – என்றார்.

(மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்)

# திருகோணமலைக் கடற்பரப்பினுள் நங்கூரமிடும் சர்வதேசக் கப்பல்கள்

## மீனவர்கள் விசனம்

திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடும் சர்வதேசக் கப்பல்களால் சிறு மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை - சாம்பல்தீவு சல்லி பிரதேச மீனவர்களே இவ்வாறு பாதிப்படைகின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடப்படும் சர்வதேசக் கப்பல்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் நங்கூரமிடாமல் கடற்பரப்பில் விரும்பியவாறு நங்கூரமிடுவதால் சிறு மீன்பிடி தொழிலாளிகள் மீன் பிடிக்க முடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றோம் எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் தாம் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் போது நங்கூரமிடப்பட்டிருக்கும் கப்பலை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடிக்க விடாமல் விரட்டுகின்றனர் எனவும் அதையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டால் இலங்கை கடற்படைக்கு அறிவித்து அவர்கள் மூலம் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இவ்வாறு வருகை தரும் சர்வதேசக் கப்பல்கள் ஒரு நேரகாலம் இல்லாமல் பயணிப்பதற்கான எல்லை ஒன்று இல்லாமல் தாம் மீன் பிடிக்கும் பிரதேச எல்லையினூடாக பயணிப்பதால் தாம் மீன் பிடிப்பதற்காக வலைகள் போட்டதன் பின்னர் இந்த சர்வதேச சரக்குக் கப்பல்கள் பயணம் செய்வதால் தமது மீன்பிடி வலைகள் வெட்டுப்பட்டு நாசம் அடைகின்றன எனக் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இவ்வாறு திருகோணமலைக்கு வரும் சர்வதேசக் கப்பல்கள் திருகோணமலை கடற்பரப்பில் விரும்பிய இடத்தில் நங்கூரமிடுவதாலும் இவ்வாறு மீன்பிடி வலைகள் நாசம் அடைகின்றன எனவும் தெரிவித்த சல்லி மீனவர்கள் இவ்வாறு வருகை தரும் கப்பல்களில் பல கழிவுப்பொருள்கள் மற்றும் பாதுகாப்பு வேலிக்கம்பிகள் போன்றவை கடலில் வீசப்படுகின்றமையால் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாசம் அடைகின்றன எனவும், இவ்வாறு சல்லி கடற் பரப்பில் தமது வலைகளில் சிக்குண்ட பாதுகாப்பு வேலி கம்பிகள் பல மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் தாம் கரைக்கு இழுத்து வந்தோம் எனவும், சில சந்தர்ப்பங்களில் தாம் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் வலையைக் கடலிலே விட்டுச்செல்கிறோம் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்குப் பல கடற்பரப்புக்கள் இருந்த போதிலும் இவ்வாறு சிறு மீன்பிடி தொழிலாளர்கள் மீன்பிடிக்கும் கடற்பரப்பில் இவ்வாறு நங்கூரமிட்டு தமது வாழ்வாதாரத்தை அழிப்பதால் மனவேதனை அடைகிறோம் என சல்லி சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் திருகோணமலை கடற்பரப்பில் இலங்கை போக்குவரத்து பழைய வாகனங்களை மீன் இனப்பெருக்கத்துக்கு என கடலில் போடப்பட்டது. அவ்வாறு போடப்பட்ட வாகனங்களாலும் நீரோட்ட காலப்பகுதியில் பல அசௌகரியங்களுக்குள்ளாகிறோம் எனவும், இதனை ஒரு சவாலாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் சர்வதேசக் கப்பல்கள் நங்கூரமிடுவதால் தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகிறோம் என சல்லி சாம்பல் தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தாம் மீனவ சங்கங்கள் ஊடாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதிலும் எமது ஜீவனோபாயத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லையெனவும், நாட்டில் விவசாயத்தை பின்தள்ளி அரிசி இறக்குமதி செய்யப்படுவதுபோல் மீன்பிடியையும் இல்லாதொழித்து மீன் இறக்குமதி செய்யும் சூழ்நிலை உருவாக வழிவகுக்க வேண்டாம் என சல்லி சம்புத்தீவு மீனவர்கள் கேட்டுக்கொண்டமையுடன், மீன்பிடி பிரச்சினைக்கு ஜனாதிபதி, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உரிய அதிகாரிகள் தீர்வைப் பெற்றுத்தருமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பேரினவாதப் பார்வை

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்ற குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசுக்கு எதிராக அடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயங்களைப் பொறுத்தவரை சிங்களத்தின் சிந்தனை – அது ஆளும் கட்சி என்றாலும், எதிர்க்கட்சி என்றாலும் – ஒரே மாதிரியானதுதான். வேறுபடாது என்பதைத்தான் எதிர்க்கட்சித் தரப்பின் பிரதான கொறடாவான கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் – லக்ஷ்மன் கிரியெல்ல வெளியிட்ட கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜெனிவாவில் பொதுஜன பெரமுன அரசு எட்டு விதமான மனித உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகப் போவதாக அவர் வரிசைப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில், வரவு செலவுத் திட்டத்தின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

இதில் புதிது – எட்டாவது – ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலில் பாதிப்பட்டோருக்கு நீதி செய்யாமை என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிடும் மற்றைய ஏழு விடயங்களும் என்ன தெரியுமா?

★ சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தல்.
★ நீதித் துறை சுதந்திரத்திலிருந்து வழுவியமை.
★ சுயாதீன ஆணைக் குழுக்களை கலைத்தமை.
★ குற்றவியல் நீதியை நிலைநாட்ட விடாது அரசியல் தலையீடு செய்தமை.
★ மத சுதந்திரச் செயற்பாடுகளில் தலையிட்டமை.
★ சமூகச் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துகின்றமை.
★ பத்திரிகைச் சுதந்திரத்தை முடக்குகின்றமை.

– இவைதானாம், இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வரப் போகும் அழுத்தங்களுக்குரிய விடயங்களாம்.

சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தும் கோட்டா அரசின் நடவடிக்கையை விட, வடக்கு – கிழக்குத் தமிழர் தாயகத்தை இராணுவ மயப்படுத்தி, அப்பிரதேசத்தை இரும்புப் பிடியில் வைத்திருக்கும் கோட்டா அரசின் போக்குக்கு எதிராகவே சர்வதேச சமூகம் சீற்றம் கொண்டுள்ளது. அது எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகரான லக்ஷ்மன் கிரியெல்லவின் கண்களில் படவில்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டுப் பத்திரமே யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் – 2002 முதல் 2010 வரை – இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் பற்றியதே என்பது பரகசியம்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கி, அதன் மூலம் நல்லெண்ணம், புரிந்துணர்வு, அமைதித் தீர்வு, சமாதான சூழ்நிலை ஆகியவற்றை எட்டுவதே ஜெனிவா அழுத்தங்களின் பின்புலமும் நோக்கமும் இலக்கும் ஆகும்.

இவற்றை எல்லாம் விட்டு விட்டு, தங்களின் இலங்கைத் தேசியக் கட்சிகளுக்குகிடையிலான பிணக்குகள், பரஸ்பர குற்றச்சாட்டுகள் குறித்து ஜெனிவா மன்று அதிகம் கவனிக்கும் என்று பகல் கனவு காண்கின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை அவரின் பார்வையில் படாமல் இருப்பதற்குக் காரணம் உண்டு. அதுவும் கூட பௌத்த, சிங்களப் பேரினவாதப் பார்வை என்பது தான்.

# சிரேஷ்ட மருத்துவ நிபுணர்கள் 16 பேருக்குப் பேராசிரியர் பதவி



மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் மருத்துவ நிபுணர்கள் பதினாறு பேருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் மருத்துவ பேராசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் 54 ஆவது வருடாந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு பிரதமரின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போதே இந்த மருத்துவ பேராசிரியர் பதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பிரதமருடன் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் மருத்துவ நிபுணர்களான பேராசிரியர் டபுள்யு. ஐ.அமரசிங்க, எரந்தி சமரகோன், எம்.சதானந்தன், எஸ்.எல்.எவ்.அக்பர், எஸ். கே.ரணராஜா, சனத் லென் ரோல், எஸ்.பீ.ஏகநாயக்க, கௌரி செந்தில்நாதன், எஸ்.ஷிவசுமித்ரன், ராணி சீதாம்பபிள்ளே, தர்ஷன டி சில்வா, எம்.என்.ஜிப்ரி, டி.கடோட்கஜன், கிரிஷான் சில்வா, நிந்ேதிர கருணாரத்ன, எச்.எம். ஜே.என்.ஹேரத் ஆகியோர் இவ்வாறு மருத்துவ பேராசி ரியர் சான்றிதழ்களைப் பிரதமரிடமிருந்து பெற்றுக் கொண் டனர்.

பேராசிரியர் டீ.ஏ.ரணசிங்க நினைவுரை இதன் போது பேராசிரியர் எஸ்.எச். தொடம்பஹல அவர்களால் நடத்தப்பட்டது. மகப்பேறியல் மற்றும் பெண் ணோயியல் மருத்துவ நிபு ணர் கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் பிரதீப் டி சில்வா அதற்கான அழைப்பை விடுத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் ஆலோசகர் பேராசிரியர் டபுள்யு.ஐ.அமரசிங்க, தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரதீப் டி சில்வா உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மேலும் 30 கோடி டொலர்களை சீனாவிடம் பெறவுள்ளது அரசு!

சீனாவிடமிருந்து மேலும் 30 கோடி டொலரை அரசாங்கம் கடனாகப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

''இந்த ஆண்டின் ஆரம்பத்தில் செலாவணி பரிமாற்ற அடிப்படையில் இலங்கைக்கு கடன் வழங்க சீனா இணங்கியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் அப்போதைய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கடந்த மார்ச் மாதம் ஊடக சந்திப்பொன்றில் கூறியிருந்தார்.சீனாவிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளும் யோசனைக்கு கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் இந்தக் கடன் தொகையை பெற்றுக் கொள்ள முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஓமான் மற்றும் இந்தியாவிடமிருந்தும் அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரித்து கொள்ளவும், எரிபொருள் கொள்வனவு செய்வதற்கும் இவ்வாறு கடன் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2021

" அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவைமரங்கள்தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

- கௌதம புத்தர்



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கு பொலிஸ் பயிற்சி இடைநிறுத்தம் சர்வதேச மனித உரிமை அமைப்பு வரவேற்பு

ஏறக்குறைய ஒன்றரை தசாப்தங்களாக இலங்கை பொலிஸ் பயிற்சியை இடைநிறுத்த ஸ்கொட்லாந்து பொலிஸார் எடுத்த தீர்மானத்தை சர்வதேச மனித உரிமை அமைப்பு வரவேற்றுள்ளது.

மனித உரிமைகள் காரணமாக இலங்கை பொலிஸ் துறைக்கு பயிற்சிகளைத் தொடர வேண்டாம் என தீர்மானித்துள்ளதாக ஸ்கொட்லாந்து பொலிஸ் தலைமை அதிகாரி இயன் லிவிங்ஸ்டன் அந்த நாட்டில் இடம்பெற்ற உயர் பொலிஸ் அதிகாரிகளின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக அதிகரித்துள்ள கைதுகள், தடுப்புக்காவல் மரணங்கள், சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையான தடுப்புக்காவல்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இலங்கை பொலிஸ் துறைக்கு ஸ்காட்லாந்து பொலிஸ் துறையினால் வழங்கப்படும் பயிற்சியை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரசாரம் செய்து வரும் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம், இது பொலிஸ் துறையின் சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என வர்ணித்துள்ளது.

ஸ்கொட்லாந்து பொலிஸ் துறை இலங்கையில் பயிற்சியை இடைநிறுத்த முடிவு செய்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

2016 ஆம் ஆண்டு முதல், சித்திரவதைகள் தொடர்பாக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அந்தப் பயிற்சியை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வரும் எமக்கு இது ஒரு பெரிய வெற்றி என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் நிர்வாகப் பணிப்பாளர் யாஸ்மின் சூகா கூறியுள்ளார்.

இலங்கையில் பல தசாப்தங்களாக சித்திரவதைகள் தலைவிரித்தாடுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இதுவே பெரும் பலம். அவர்களில் சிலர் ஸ்கொட்லாந்தில் வசிக்கின்றனர்.

2016 ஆம் ஆண்டு இலங்கையில் அரசாங்கம் ஒரு மோசமான சித்திரவதை கூடத்துக்குப் பொறுப்பான பொலிஸ் துறை அதிகாரி ஒருவரை சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவிற்கு தனது பிரதிநிதியாக அனுப்பும் துணிச்சலைக் கொண்டிருந்தது.

இதன்போது சித்திரவதைகள் நடைபெறவில்லை என இலங்கை அதிகாரிகள் மறுத்து, தங்கள் நம்பகத்தன்மையை வலுப்படுத்த பிரித்தானிய பயிற்சியை மேற்கோள்காட்டினர்.

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர் தூதரகத்தின் நிதியுதவியுடன் இலங்கையில் நடத்தப்படும் பொலிஸ் துறை பயிற்சி எதிர்வரும் மார்ச் மாதம் நிறைவடையவுள்ளது.

கடந்த மே மாதம் அதை நீடிக்கலாமா என்பது தொடர்பில் ஆராய பிரித்தானியா தீர்மானித்தது. இந்தப் பயிற்சியில் சமூகக் காவல் மற்றும் பாலியல் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது மற்றும் பொலிஸ் சேவையில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் துறை தெரிவிக்கின்றது.

இலங்கை மற்றும் பிரித்தானிய பொலிஸ் துறையால் ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அம்பலப்படுத்திய புலனாய்வு ஊடகவியலாளர் பில் மில்லர், இலங்கை சமூக காவல் சேவையில் பிரித்தானிய நிதியை பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டித்திருந்தார்.

எவ்வளவு பயிற்சிகளை வழங்கினாலும் மனித உரிமை மீறல்கள் ஓயாது எனத் தெரிவித்துள்ள ஜஸ்மின் சூகா, சித்திரவதை விடயத்தில் நியாயத்தை நிலைநாட்ட சர்வதேச சமூகம் பாடுபட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

எல்லா வகையான பயிற்சிகள் இருந்தபோதிலும், இலங்கை பொலிஸ் துறையும் இராணுவமும் தொடர்ந்து சித்திரவதைகளில் ஈடுபடுகின்றன.

சர்வதேச சமூகம் செய்ய வேண்டியது என்னவென்றால், நிறுவன மீறல்களைத் தடுக்க போதுமான பயிற்சி மற்றும் சாத்தியமான வளர்ச்சிக்கு உதவி வழங்குவதை விட, சித்திரவதைக்கான பொறுப்புக் கூறலில் கவனம் செலுத்த வேண்டும்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காரணமாக இலங்கையில் பொலிஸ் துறை, சர்வதேச அளவில் உச்சபட்ச ஒத்துழைப்பை இழந்துள்ளமை தொடர்பில் அரசாங்கம் இதுவரை பதிலளிக்கவில்லை.

# புலம்பெயர் தமிழர்களால் மாவீரர் நினைவு லண்டனில் உணர்வெழுச்சியுடன் நடந்தது






தமிழர் தாயகமெங்கும் மாவீரர் தின நிகழ்வுகள் சனிக்கிழமை உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற அதேவேளை புலம்பெயர் தேசம் எங்கும் மாவீரர் நாள் உணர்வு பொங்க நடைபெற்றது.

லண்டனின் ஒக்ஸ்போட் நகரிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் ஏற்பாட்டில் உணர்வெழுச்சியுடன் தீபமேற்றி அகவணக்க நிகழ்வுகள் நடந்தன.

இதேநேரம், லண்டன் நாடாளுமன்றத்திலும் கார்த்திகைப் பூ வைத்து மாவீரர்கள் நினைவு கூரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகளின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

தற்போதைய அரசாங்கத்தால், அண்மையில் அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் நியமனங்களை நிரந்தரமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டதாரிகளின் சம்பளத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி அவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு 41 ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட உள்ளது.

தற்போது அவர்கள் மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா பெறுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விரும்பியவாறு மருந்துகளை பாவிக்காதீர் என எச்சரிக்கை!

வைரஸ் தொற்றினால் ஏற்படும் தடிமன் மற்றும் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு கூட தாம் விரும்பியவாறு நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்வது உகந்தது அல்ல என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இது ஒரு பயங்கரமான விளைவைத் தரக்கூடியது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து நுண்ணுயிர் எதிர்ப்பு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அவற்றின் மூலமான பயன் அமையும் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தனது முகப்புத் தகத்தில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ளது.

# கற்பூர உற்பத்தி சிறுதொழில் முயற்சியாளருக்கு இயந்திரக் கொள்வனவுசெய்வதற்கு நிதியுதவி!

## சித்தார்த்தன் எம்.பியின் முயற்சியால்

கற்பூர உற்பத்தியில் ஈடுபடும் சிறுகைத்தொழில் முயற்சியாளர் ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் முயற்சியால் இயந்திர கொள்வனவுக்கான நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இருபாலை கிழக்கு மண்டான்குள வீதியைச் சேர்ந்த தி.உசாயினி என்ற பெண் தொழில் முயற்சியாளருக்கு கற்பூர உற்பத்திக்கு பிரதேச செயலகத்தால் தொழில் முயற்சி உதவி வழங்கப்பட்டது. எனினும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருப்பது தொடர்பாக தொழில் முயற்சியாளரால் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் முயற்சியால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் லண்டன் கிளை உறுப்பினர்களான தயா மயூரன், முகுந்தன் ஆகியோரின் அனுசரணையில் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை உதவி பிரதேச செயலர் திருமதி ச.ராதிகா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பா. கஜதீபன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் ஆகியோர் தொழில் முயற்சியாளரிடம் நிதி உதவியை வழங்கி வைத்தனர். இதன்போது விதாதாவளநிலைய வெளிக்கள இணைப்பாளர் ஜெயானந்தன், அபிவிருத்தி உதவியாளர் சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வெள்ளவத்தையில் ரயில் மோதி இருவர் சாவு

கொழும்பு - வெள்ளவத்தையில் ரயில் மோதி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு வெவ்வேறு ரயில்களில் மோதி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் பெலியத்தையிலிருந்து மருதானை வரை பயணித்த காலுகுமாரி சீக்ரகாமி ரயிலில் மோதி 43 வயதுடைய இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் உயிரிழந்துள்ளார்.

இதே போன்று ராமகிருஷ்ணா வீதிக்கு அருகில் ரயில் கடவையில் கொழும்பிலிருந்து தெஹிவளை நோக்கி சென்ற ரயிலில் மோதி 48 வயதுடைய வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார். வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப்பொலிஸ்ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 206

# இனப்படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**530. அரசியல் கட்சிகள் கூட இனப்படுகொலையெனத் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றுதானே கேட்கின்றன?**

கேட்கலாம், கேட்கவேண்டும், அதில் தப்பில்லை. நடந்தவையை ஒட்டி அது நியாயமான கோரிக்கை கூட.

1951 ஆண்டு முதல் தமிழ் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு கோருகிறார்கள். அதற்கு அவர்களுக்கு எல்லாத் தகுதிகளும் உண்டு.

ஆனால் அது இன்னும் கைகூடி வரவில்லை. மேகம் கறுக்கட்டும், கலைந்து போகும். ஏனெனில் அதுவும் சர்வதேசம் என்ற இணைப்புக்குள் அகப்பட்டுள்ளது.

ஆனால், இனப்படுகொலைதான் நடந்தது என ஐ.நாவின் கட்டமைப்புக்களால் தீர்மானிக்கப்படுமோ என்பது நிச்சயமற்றது.

அரசியல் பரப்புக்காகவோ, நோக்கத்திற்காகவோ சொல்லப்படுபவைகளையும் செய்யப்படுபவைகளையும் விலத்திப் பார்த்தால் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் பின், நடந்தது இனப்படுகொலை என எந்த ஐ.நா. கட்டமைப்பும் ஆராயவில்லை. ஐ.நாவின் மனித உரிமை மன்று சர்வதேச சட்டங்களுக்கு மாறாக மனித உரிமை மீறல்களும், அதை ஒட்டிய குற்றங்களும் நடந்தனவா என ஆராய்ந்து வருகிறது. அதற்குப் பாரப்படுத்தப்பட்ட காலம் 2002 - 2009 வரையான காலம். ஆராய்வுக்கான நோக்கங்களை அவதானிக்க மனித உரிமை மன்று அதற்கு முந்திய அதன் பிந்திய காலப்பகுதிகளையும் பார்க்கலாம். ஆனால் குற்றங்கள் இழைக்கப்பட்ட காலங்களாக பார்க்க வேண்டியது 2002 - 2009 காலப்பகுதியே.

**531. இனப்படுகொலை எனக் காணப்படுவது நிச்சயமற்றது என ஏன் கருதுகிறீர்கள்?**

முதலாவது - சர்வதேச அரசியல் போக்குகள் அப்படியான ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு உந்துதல் தருவனவாகக் காணப்படவில்லை. சர்வதேச நாடுகள் இன்றைய புவியியல் அரசியல் சூழலில் ஸ்ரீலங்காவை ஒரு நாடாகவும் அதனுடன் மற்ற இனங்களும் வாழ்கின்றன என்ற கருத்திலேயே பார்க்கின்றன. இனப்படுகொலை எனக் காணப்பட்டால் பரிகார நீதியாக ஸ்ரீலங்காவின் இறைமையை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் எழும். அப்படியான மேலும் சிக்கலானவைக்கு முகம் கொடுக்காமல் ஒரு நாடாக அதற்குள் ஏற்படக்கூடிய இணக்கம் காணப்படக்கூடிய வழிவகைகளையே சர்வதேசம் தேடும்.



இரண்டாவது - ஐ.நாவின் பலம் வாய்ந்த நாடுகள் தங்களது அனுகூலங்களை, ஆதாயங்களை நோக்கியே அப்படியான அணுகுமுறைகளை எடுக்கும். பழைய செக்கோஸ்லாவாக்கியா பிரிந்து பல நாடுகளானபோது அவற்றை பின்னின்று இயக்கியவர்கள் ஐரோப்பிய யூனியன் முன்னணி நாடுகள். அவற்றுக்கு சோவியத் யூனியனின் ரஷ்யா அதிகாரம் செலுத்திய நாடுகளின் கட்டமைப்புக்களை உடைப்பதில் ஆர்வம் இருந்தது. கிழக்குத் தீமோருக்கு சுயநிர்ணய உரிமை வழங்கி அதனை தனி சுதந்திர நாடாக அனுமதித்தபோது அதில் போர்த்துக்கல்லுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் தீமோர் கடற்பரப்பில் இருந்த எண்ணை வளங்களால் ஆதாயங்கள் இருந்தன. பங்களாதேஷத்தை உருவாக்கும்போது பாகிஸ்தானைப் பிரிக்கும் தேவை இந்தியாவிற்கு இருந்தது. ஸ்ரீலங்காவை பொறுத்தவரை அதன் மேல் சீனாவின் ஆதிக்கம் மேற்கத்திய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் தலைவலியைத் தந்தாலும் அவை அந்த தலைவலியுடனும் ஸ்ரீலங்காவை ஒரு நாடாக வைத்து ஆதிக்கம் செலுத்த விளைகின்றன.

மூன்றாவதும் முக்கியமானதும் - போருக்கு பங்காளிகளாக இருந்த நாடுகளும் மற்றவையும் கூட தாங்கள் அளித்த உதவிகளை "சர்வதேசபயங்கரவாதத்தை" ஒழிப்பதற்கு என்று நியாயப்படுத்தினர். நிரந்தர தீர்ப்பாயத்திற்கு ஸ்ரீலங்கா அரசு சமுகம் தரவில்லை. ஆனால் ஐ.நா. கட்டமைப்பின் விசாரணைகளில் அது கட்டாயம் பங்கேற்கும். பங்கேற்று அந்தக் காலகட்டத்தில் நடைபெற்றவையெல்லாம் பயங்கரவாதத்தை அழிப்பதற்காக செய்யப்பட்டவை என வாதாடும். அதற்கு நேச நாடுகள் பலவும் ஆதரவு தர எதிர்பார்க்கலாம். அவற்றுக்கு மேலாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் துணைக் குழுக்களாக போராடியவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரான சாட்சியங்களும் அவர்களின் முனைப்பில் பல ஆயிரம் சாட்சியங்களும் அரசு சார்பாக கையளிக்கப்பட்டுள்ளன.

இரு தரப்பு சாட்சியங்களையும் வாதங்களையும் உற்று நோக்க வேண்டிய பொறுப்பு விசாரணைக் கட்டமைப்புக்கு உண்டு.

அதையடுத்து, நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் (Tamil Aganist Genocide) என்ற அமைப்புக்கள் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியாவை இந்த இனக்கொலையில் பங்குதாரிகளாகக் குற்றம் சுமத்தி, அவற்றிற்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்து, அந்த நாடுகளுக்கு எதிரான அபிப்பிராயங்களும் பெற்றார்கள். ஐ.நாவின் விசாரணைகளில் இனப்படுகொலையாக ஆராயப்படும்போது அவற்றுக்கு உறுதுணையாக உதவி புரிந்தோர்களை அடையாளப்படுத்தும் கடமை ஒன்றும் ஆராய்வாளர்களுக்கு உண்டு. ஆகவே அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற முக்கிய நாடுகள் தங்கள் உதவிகளின் அடிப்படையில், தங்களுக்கெதிரான விசாரணைகளை விரும்பாமல் அவற்றை முடக்கும்.

ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலை என்பது மறுக்க முடியாதது. ஆனால் அதற்கானஏற்புடைமையும் இனப்படுகொலை தொடர்பான இறுக்கமான சர்வதேச சட்ட ஏற்பாடுகளும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பால் ஏதோ ஒரு விதத்தில் நேர்மறையையும், நீதிக்கான தாமதத்தையும் ஏற்படுத்தும்போது, பாதிக்கப்பட்ட இனத்திற்கான நீதியை எட்ட இனப்படுகொலைக்கான கோரிக்கையை தொடர்ந்து முயற்சிப்பது தவறல்ல. ஆனால் அதனை மாத்திரமே தீர்வு பொதியாக்கி உடும்புப் பிடியாக பற்றுவதும் மனிதாபிமானத்திற்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் போன்ற ஏனைய சட்ட ஏற்பாடுகளை உபயோகிக்காமல் தவிர்ப்பதும், முன்னெடுக்காமல் பின்போடுவதும், முயற்சிக்காமல் விடுவதும் எமக்கு மென்மேலும் நீதியை பெறுவதற்கான தாமதத்தை ஏற்படுத்தும் என்ற வாதம் பெருமளவு யதார்த்தமானது. இது இனப்படுகொலை என்னும் வாதத்தை மறுப்பதல்ல என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். வன்முறையை எதிர் கொண்ட தமிழ் மக்களுக்காக நீதியை விரைவுடன் எட்டுவதற்கு விரைவானதும் வலுவானதும் அதை சர்வதேசத்தில் பல எதிர்ப்புகளின்றி முன்னெடுத்து செல்லக் கூடிய வழிமுறையாகும் இது என்பதில் தெளிவு கொள்ளவேண்டும். எலி தான் போவதற்காக வழி இல்லாத நிலையில் விளக்கு மாற்றையும் சேர்த்து இழுத்துக் கொண்டு செல்வதற்குப் பார்க்கிறது என்ற வழக்கு எங்களிடையே உண்டு.

**532. 12 வருடங்களுக்கு மேலாக இனப்படுகொலைக்கான நீதியை எதிர் பார்த்து நடத்திய போராட்டங்களை இது மழுங்கடிக்காதா?**

அப்படியான அங்கலாய்ப்பு தேவையற்றது. நடந்தது இனப்படுகொலைதான் என நிறுவுவதை அரசியலிலிருந்து - முக்கியமாக தமிழ் மக்களின் அரசியலிலிருந்து - வெளியெடுத்து அதனை சர்வதேச சட்டத்தரணிகள், சட்ட ஆய்வாளர்கள், அவற்றுக்காக இயங்கும் அமைப்புக்களிடையே மேல் நடத்தக் கொடுத்து, தமிழ் மக்களுக்கான தீர்வுகளை மற்றக் குற்றங்களிலிருந்து விரைவான விடியலுக்காக முன்னேற்றி செல்ல வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் தரப்புக்குள் இருக்கும் பிணக்குகளால், அவர்களது ஆதயங்களுக்காக நடத்தப்படும் இவற்றை அவற்றைக் கையாள வேண்டிய தரப்புக்களிடம் தர வேண்டும். விடுதலைப் புலிகளின் பிரபாகரனும் ஒரு நீண்ட ஆயதப்போராட்டத்தை அதிகாரத்துடனும் ஆளுமையுடனும் நடத்தினார். அளப்பரிய அர்ப்பணிப்புக்களும் தியாகங்களும் இருந்தும், அது சர்வதேசத்தின் நீரலையில் ஒத்து ஓடாததால் மழுங்கடிக்கப்பட்டது.

அவரே 'போராட்ட வடிவங்கள் மாறலாம், ஆனால் போராட்டம் தொடர வேண்டும்' என்று தெரிவித்தாலும் தொடரும் போராட்டங்கள் அவர் எதிர்பார்த்த போலில்லை.

தமிழ் மக்களுடைய நீதி தேடிய போராட்டம் முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டுமானால் அவர்களுடைய அரசியல் தரப்புக்கள் வைக்கும் கோரிக்கைகளில் ஒரு நிதர்சனம் - யதார்த்தம் - மட்டுமல்ல, ஸ்துரத்தன்மையும் இருக்க வேண்டும். அதை விட்டு உணர்ச்சிகளையே அடிப்படையாக்கி, நிலைத்திருக்கக் கூடிய நிலைப்பாடுகளில் நடத்திச் செல்லாமல், இதுவரையும் அவர்கள் வெதவெதப்பாகக் காரியமாற்றியுள்ளார்கள், காரியமாற்றுகிறார்கள். சர்வதேசத்துக்கு வசதியாக அதனுடன் இணைந்து பயணிக்கக் கூடிய அணுகுமுறைகள் இனப்படுகொலையின் கோரிக்கையை மழுங்கடிக்காது. ஆனால் அவர்களில் சில பகுதியினர் தொடர்ந்து செய்யும் செயற்பாடுகள் அவர்களை மேலும் வன்முறைவாதிகளாகவே சர்வதேசத்தைப் பார்க்க வைக்கிறது.

மேற்குலக நாடுகளும் இந்தியாவும் தங்களுக்கான ஆதரவை தேடும்போது, அந்த ஆதரவுத் தேடுதல் ஸ்ரீலங்காவை நெருக்குவதற்கேயொழிய, தமிழ் மக்கள் கேட்பதை எடுத்துக் கொடுத்து அவர்களை தம்பக்கம் சேர்த்துக் கொள்வதற்கு அல்ல. ஸ்ரீலங்கா தங்களோடு இணைந்து, சீனாவின் ஆளுமையை குறைக்காத பட்சத்தில், ஐ.நா. கட்டமைப்புக்கள் ஊடாக நெருக்குவாரம் கூட்டப்படும். தமிழ் மக்கள் எதிரும் புதிருமாக இருக்க சர்வதேச கட்டமைப்புக்களில் அவர்களின் தேவைகளில் அக்கறையீனம் காட்டப்படும். அது புரிந்து கொள்ளக்கூடியதே. அதில் இணைந்து கொள்ளும் அணுகுமுறை ஒற்றுமையான அன்றில், ஒத்த நிலையில் அமைய வேண்டும். ஒற்றுமை இல்லாமல், அவர்களது ஒற்றுமையீன பிணக்குகளை அவர்களிடம் கொண்டு சென்று "துரோகிகளை" வழமைபோல் அடையாளப்படுத்துவது எது வித நன்மையும் பெற்றுத்தரப் போவதில்லை.

(வளரும்....)

# சிங்களம் மற்றும் பௌத்தத்தை முன்னிலைப்படுத்தும் அரசமைப்பை ஆட்சியாளர்கள் உருவாக்குகின்றனர்

## ஆஸ்திரேலியா உயர்ஸ்தானிகரிடம் சித்தார்த்தன் தெரிவிப்பு



நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்பு, ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாகக் கொண்ட சிங்களம் மற்றும் பௌத்தத்தை முன்னிலைப்படுத்திய அரசமைப்பொன்றே உருவாகும் சாத்தியம் அதிகம் காணப்படுவதாக புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலிக்கும் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பொன்று உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, புதிய அரசமைப்பு தொடர்பான விடயங்கள் பற்றி அவதானம் செலுத்தப்பட்டபோதே சித்தார்த்தன் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு விடயங்கள் தொடர்பாக ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் கவனத்துக்குக் கொண்டு வந்த சித்தார்த்தன், கல்வித்துறை மேம்பாட்டுக்கான ஒத்துழைப்புக்களை ஆஸ்திரேலியா மேம்பட்ட ரீதியில் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளார்.

மேலும், தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் மேலும் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சித்தார்த்தன் உயர்ஸ்தானிகரிடத்தில் கூறியுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஓர் அரசமைப்பை உருவாக்கும் என நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார்.

## வீடொன்றின் மீது மண்மேடு சரிந்தது



சீரற்ற காலநிலை காரணமாக கண்டி, அங்கும்புர பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் வீட்டில் இருந்த 55 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது வீட்டில் இருந்த அவரது 9 வயது மகள் விபத்தில் படுகாயமடைந்து கண்டி பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக பதுளை கந்தேகெதர கல்கொடுவ கிராமத்தின் நுழைவாயிலில் இரண்டு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சில நாள்களாக ஏற்பட்ட மண்சரிவுகளால் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டை முன்னேற்றுவதற்காக பல்வேறு தீர்மானங்கள் வரும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டை முன்னேற்றுவதற்காக எதிர்காலங்களில் பல்வேறு தீர்மானங்களை எடுக்க வேண்டி இருக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த தீர்மானங்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகினாலும் எதிர்காலத்தில் மக்களுக்கும் நாட்டுக்கும் அதன் பிரதிபலன்கள் கிடைக்குமென அவர் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறுகிய கால சிக்கல்களை வெற்றி கொண்டதன் பின்னர் பொருளாதார நிவாரணங்களை வழங்க முடியும். ஆகவே அனைவரும் நாட்டைப்பற்றி சிந்தித்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கைக்குள் உள்நுழைவதற்கு 6 நாடுகளின் பயணிகளுக்குத் தடை

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் திரிவு காரணமாக, சில நாடுகளிலிருந்து வருகைதரும் பயணிகளுக்குத் தடை விதிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி பொத்ஸ்வானா, தென்னாபிரிக்கா, நமீபியா, லெசோதோ, எஸ்வடினி மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு, சனிக்கிழமை நள்ளிரவு முதல் தடை விதிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 14 நாள்களுக்குள் குறித்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டவர்களுக்கு இந்தத் தடை விதிக்கப்பட உள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாக்குவாதம் நீண்டதில் ஒருவர்மீது கத்திக்குத்து!

இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கணேவத்த தம்பகல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கல்கமுவ, இஹல பழுகுமுதேவ பகுதியைச் சேர்ந்த பிரியங்கர சாலிய குமார (வயது - 46) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கார் திருத்துநரான மரணமானவர் கணேவத்தை தம்பகல்ல பிரதேசத்தில் உள்ள தனது உதவியாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அந்த நபர் உதவியாளரால் குத்திக் கொல்லப்பட்டார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# எரிவாயு கசிவை கண்டறிய புதிய கருவி கண்டுபிடிப்பு

கடந்த சில நாள்களாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து எரிவாயு கசிவு காரணமாக வெடிப்புகள் பல ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எரிவாயுக் கசிவு ஏற்பட்டால், முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் இதுபோன்ற கடுமையான விபத்துக்களைத் தடுக்கலாம்.

அதன்படி, எரிவாயு கசிவைக் கண்டறிய உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சாதனம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கசிவைக் கண்டறியும் கருவிகள் பொதுவாக உலகின் ஏனைய பகுதிகளில் பயன்படுத்தப்பட்டாலும், இலங்கையில் இன்னும் பரவலாகக் கிடைக்கவில்லை.

லைப் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சாதனம் நாட்டிலேயே முதல் எரிவாயு கசிவைக் கண்டறியும் கருவியாகும்.

எபிக் குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு பிரிவின் திட்டத்துக்குப் பொறுப்பான தலைமை பொறியியலாளர் சானக தென்னகோன் இது தொடர்பில் தெரிவிக்கையில் –



வாயு கசிவைக் கண்டுபிடிக்கும் சாதனம் என்ற போதும் இது தீப்பிடிக்கும் எந்தவொரு விடயத்துக்கும் செயற்படும். இதனை இணையத்துடன் தொடர்புபடுத்த முடியும். இதன் காரணமாக விபத்து ஒன்று ஏற்பட்டால் கைப்பேசிக்கு எச்சரிக்கை செய்தி வரும். இது, வாயு, வெப்பநிலை மற்றும் புகை போன்றவற்றை உணரக்கூடியது. – என்றார்.

# பாடசாலைகளை மீண்டும் மூடாதீர்!

## கர்தினால் கோரிக்கை



பாடசாலைகளை மீண்டும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கேகாலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒன்லைன் முறையில் குழந்தைகள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக நேரிடும் என்பதால், பாடசாலைகளிலேயே கல்வி கற்பிப்பது மிகவும் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு மாகாணச் செயலாளருக்கும் ஆளுநருக்கும் தமிழ்மொழி தெரியாது!

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. வேதனை

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்தி சபையைக் கொழும்புக்கு மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் தலைவராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண செயலருக்கு ஆங்கிலமும், தமிழும் தெரியாது. வடக்கு ஆளுநருக்குத் தமிழ் தெரியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

யாழ்ப்பாணம் மாவட்டத்திலே இருக்கின்ற குறிப்பாக வடக்கையும், கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்தி சபை என்பது இப்போது கொழும்பை நோக்கித் தள்ளப்படுகின்றது. அதனுடைய தலைவராகத் தற்போது முதன்முதலாக ஒரு சிங்கள மொழி பேசுபவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நான் அவர் மீது குற்றம் சொல்லவில்லை. ஆனால், பனை அபிவிருத்தி சபை தமிழர்களின் பாரம்பரிய தொழிலை அடிப்படையாகக்கொண்டது. எனவே, தயவு செய்து அதனைத் தமிழர்களிடம் விடுங்கள்.

ஒரு கித்துள் திணைக்களத்துக்கோ அல்லது தென்னை அபிவிருத்தி திணைக்களத்துக்கோ தமிழ்த் தலைவரை நியமியுங்கள் என்று நான் கேட்கவில்லை. பனை அபிவிருத்தி சபை கணக்காளர், உத்தியோகஸ்தர்களில் கூட அதிகளவான சிங்களவர்கள் இணைக்கப்படுகின்றனர்.

பனை அபிவிருத்தி சபையை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது வடக்கு, கிழக்குக்கு உரியது. அதில் உள்ள தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களில் நிறைய மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்று அறிகின்றோம்.

பல பேரின் மாற்றங்களில் தமிழர் நீக்கப்பட்டு சிங்களவர் நியமிக்கப்படுகின்றனர். குறிப்பாக வடக்கு மாகாண செயலருக்கு ஆங்கிலமும் தமிழும் தெரியாத ஒரு சிங்கள மொழி பேசுபவர். நாங்கள் மொழி ரீதியாக அவருடன் பேச முடியாது.

வடக்கு மாகாண ஆளுநரால் கூடத் தமிழ் பேச முடியாமல் உள்ளது. அவ்வாறான நிலைமைக்குள் தான் நாம் தொடர்ந்தும் தள்ளப்படுகின்றோம். ஒரு கல்வி அமைச்சை எடுத்தீர்களேயானால் அங்குள்ள மேலதிக செயலாளர்களில் ஒருவர் கூடத் தமிழர் அல்லர்.

பல அரச திணைக்களங்களில் இதே நிலைதான். தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பதற்கு கூட ஆள்கள் இல்லை. இன விகிதாசாரம் கூட பேணப்படாது நிலைமை மோசமாக இருக்கின்றது. தயவு செய்து இந்த விடயத்தில் அதிக கரிசனை செலுத்துங்கள். – என்றார்.

## புத்தளத்தில் உயிரிழந்த யானையை குழிதோண்டிப் புதைத்தவர் கைது



புத்தளம், கல்லடி 6 ஆம் கட்டைப் பகுதியில் உயிரிழந்த யானை ஒன்றை குழிதோண்டி புதைத்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் ஒருவர் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், உயிரிழந்த நிலையில் இரண்டு நீளமான தந்தங்களுடன் புதைக்கப்பட்ட குறித்த யானையின் உடலமும் தோண்டியெடுக்கப்பட்டதாகவும் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எரந்த கமகே தெரிவித்தார்.

குறித்த பகுதியிலுள்ள காணியில் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருக்கும் மின்சாரம் வேலியில் சிக்கி மேற்படி யானை கடந்த புதன் கிழமை உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்துக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே, மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்த யானை புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையுடன், சம்பவம் தொடர்பில் காணியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், யானையின் இரண்டு தந்தங்களையும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது பொறுப்பில் எடுத்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வடமத்திய மாகாணப் பாடசாலைகளில் 1,000 மாணவர்களுக்குக் கொரோனா

வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பெருமளவிலான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

'வடமத்திய மாகாணத்தில் 100 ஆசிரியர்களும், 1,000 மாணவர்களும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்தவில்லை. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் எதுவும் இல்லை. – என்றும் குற்றஞ்சாட்டினார்.

## முழு இலங்கையுமே ஸ்தம்பிக்குமாம் மின்சார தொழிற்சங்கம் எச்சரிக்கை

முழு இலங்கையையே ஸ்தம்பிக்கச் செய்வோம் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்ததை எதிர்த்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

மின்சாரசபை பொறியியலாளர் சங்கத்தின் சட்டப்படி வேலை போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என சங்கத்தின் தலைவர் சௌமய குமாரமடு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

சட்டப்படி வேலை போராட்டத்தின் ஊடாக மின்சார விநியோகக் கட்டமைப்பு கட்டம் கட்டமாக செயலிழக்கும். மின்சாரத் துண்டிப்புக்கள் இடம்பெறும். அந்த நிலைமை அதிகரித்துச் செல்லும். நீர் விநியோகம் தடைப்படும். வைத்தியசாலை கட்டமைப்பு செயலிழக்கும். எரிபொருள் விநியோகம் தடைப்படும். நாடே ஸ்தம்பிதம் அடையும். அவ்வாறான ஒரு நிலைமைக்கு எங்களைத் தள்ளவேண்டாம் என அவர் ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார்.








# பிரிட்டன் நாடாளுமன்றுக்கு முன்பாக மாவீரர்தின நினைவுகூரல் நிகழ்வுகள்

பிரிட்டன் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக 'நாங்கள் நினைவுகூருகின்றோம்' என்ற வாசகத்தின்மீது கார்த்திகைப்பூக்கள் வைக்கப்பட்டு மாவீரர் தினம் நினைவுகூரப்பட்டது.

அதுமாத்திரமன்றி தமிழர்களை மிகமோசமான அடக்குமுறைகளுக்கு உட்படுத்தியதுடன் போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இழைக்கப்பட்ட சிவில் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதென்பது மிகவும் முக்கியமானதாகும். இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகூரும் உரிமையில் இலங்கை அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது என்றும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படுவதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் பிரிட்டன் அரசாங்கம் முன்னிலை வகிக்கவேண்டியது அவசியமாகும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

48

### அமேசன் அக்கடமி

மெய்நிகர் வாடிக்கையாளரின் பொருள்கள் கொள்முதலுக்காகக் கொண்டுள்ள தத்துவம் தனித்துவமானது. மெய்நிகர் சந்தையில் பொருள்களைக் கொள்முதல் செய்ய இரண்டு அடிப்படை அளவுகோல்கள் உள்ளன. அதாவது சிறந்த விளம்பரம், ஒப்பந்தம் மற்றும் சிறந்த தயாரிப்பு. ஒருவர் எந்த தளத்தில் இருந்து பொருள்களைக் கொள்முதல் செய்கிறார் என்பது முக்கியமில்லை. இந்த இரண்டு விடயங்களுமே முக்கியம் பெறுகின்றன.

இணையத்தில் கிடைக்கின்ற கல்விச்சேவைகளும் இந்த அடிப்படையில் தான் பெற்றோர்களால் தெரிவு செய்யப்படுகின்றன என்பதை மறந்துவிடலாகாது. இந்த அடிப்படையில் உலகளவில் ஈ.வணிகம் அதாவது கல்வி ஈ.வணிகம் கவனத்தைப் பெறுகின்றது. சென்ற வாரம் இந்தியாவில் உள்ள ஈ. வணிகம், கல்வித் தொழில்நுட்பம் அல்லது எட்டெக் (EDTech) வளர்ச்சி பற்றி பார்த்திருந்தோம். மெய்நிகர் கல்விப் படிப்புகள் இந்திய ஈ.சந்தையில் ஒரு பரந்த வேட்டைக் களமாக வேகமாக மாறி வருகிறது, ஏனெனில் ஈ.வணிக விளம்பரங்கள் உலகளாவிய ஜாம்பவான்கள் மற்றும் உள்ளூர் வீரர்கள் மூலம் இந்தியப் பெற்றோரை ஈர்க்கத் துடிக்கிறார்கள். இது எதிர்கால கல்விப்பாரம்பரியத்தில் பாரிய மாற்றத்தை கொடுக்கும் என்று நம்பலாம். அதாவது செலவு குறைந்த கல்விச் சேவையைப் பெறும் வாய்ப் புக்களின் அதிகரிப்பின் விளைவாகும்.

சமீபத்தில் ஈ. வணிக ஜாம்பவான் நிறுவன மான அமேசான் தனது ஒன்லைன் சோதனை - தயா ரிப்பு தளமான Amazon Academyஐ இந்தியாவில் தொடங்கியுள்ளது. அமேசான் அகாடமி, 13 ஜனவரி 2021 அன்று Amazon Indiaஆல் தொடங்கப்பட்டது. அதாவது மாணவர்களின் கல்லூரி மற்றும் உயர்கல்வி நுழைவுக்கான நுழைவுத் தேர்வு - உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதற்கு உதவுவதற்காக இதை ஆரம்பித்திருக்கிறது. இது பொதுவாக போட்டித் தேர்வுகளுக்கு பொறியியல் மாணவர்களுக்கான மெய்நிகர் கற்றல் தளமாகும். இது கல்விப்புலத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது தற்போது Play Store மூலம் இலவசமாகக் கிடைக்கிறது, ஆனால் இதன் சோதனை முயற்சிகளின் வெற்றியைப் பொறுத்து காலப்போக்கில் விலைக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தலாம் என்று குறிப்பிடப்படுகின்றது.

அமேசனின் ஈ.வணிகத்தில் பரிசோதனை முயற்சியான Amazon Academy ஒரு எட்டெக்(Ed.Tech) விலை உணர்திறன் சந்தையாகும், ஏனெனில் இதில் நிறைய மாணவர்கள் இலவசமாக கிடைப்பதால் இணைந்து கொள்வார்கள் குறிப்பாக இந்தக் காரணத்திற்காக நடுத்தர வர்க்கம் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பலர் இணைவார்கள் இதனால் எதிர்கால சந்தை இலாபம் நிறைந்ததாக அமையுமென்ற நம்பிக்கையில் இந்த சந்தைகளைத் திறக்கிறார்கள்.

அமேசானின் ஒன்லைன் தயாரிப்பு தொகுதி, நேரடி விரிவுரைகள் மற்றும் கணிதம், இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகியவற்றில் விரிவான மதிப்பீடுகளுக்கான கற்றல் பொருள்களை வழங்கும்.

இந்தியாவில் ஈ.கல்வி வணிகம் எப்போதும் லாபகரமான சந்தையாக இருந்து வருகிறது. பெங்களூரைச் சேர்ந்த பைஜூஸ் - இந்தியாவின் மிகப்பெரிய எட்டெக் நிறுவனம் - மற்றும் அதன் சிறிய களநிலைப் போட்டியாளரான அன்னகடமி (Unacademy) காணப்படுகின்றது.

ஐ.பி.எல். போட்டியில் இந்த ஈ.கல்வி வணிகப் போட்டியின்தீவிரம்கடந்த ஆண்டில்அதிகரித்துள்ளது.. பைஜூஸ் மட்டும் சுமார் $1.15 பில்லியன் நிதியை 2020 ஆண்டு திரட்டியது. கடந்த ஆண்டு தொற்று நோய் இருந்தபோதிலும் பங்கு நிதியில், பகுப்பாய்வு நிறுவனமான Tracxnஇன் தரவுகளின்படி, பேஸ்புக் ஆதரவுடன் Unacademy $354 மில்லியன் திரட்டியது. இது வியப்பூட்டுமளவில் கல்வி, வணிகம் மெய்நிகர் தளத்தில் விரிவடைவதைக்காட்டுகிறது.

கல்வித் தேர்வுகள், தரமதிப்பீடுகள் மற்றும் கல்லூரிகளின் முதலிடத்துக்கான போட்டி இணையவழி கல்வி வணிகத்துக்கிடையான போட்டியாகவே காணப்படும். ஏனெனில் இந்தியாவில் இனிமேல் வெற்றிக்கான வரையறை ஒரு சிறந்த கல்லூரியில் இடம் பெறுகிறது என்று எதிர்வுகூறப்படுகின்றது.

ஏனெனில் அமேசான் போன்ற பாரம்பரியமாக கல்வியில் இல்லாத, ஆனால் ஏற்கனவே ஈ.வணிகச் சந்தையில் நுழைந்துவிட்ட நிறுவனங்களும் கடும் போட்டியை மெய்நிகர் தளத்தில் கல்வி வணிகத்துக்காக உருவாகிவிட்டன, இந்திய கல்வியின் ஈ.வணிகத்தில் அமேசானின் நுழைவு ஏற்கனவே அதிக போட்டிக்கு வழிவகுக்கும், கற்பவர்கள் மற்றும் பெற்றோருக்கு ஏற்றதாக அதிக விருப்பங்கள் மற்றும் சாத்தியமான செலவு குறைக்கப்பட்ட கல்வியை எங்கிருந்தும் எளிதாக அணுகும் வாய்ப்புக்கிடைக்கும்.

அமேசான் அகாடமியின் பதிப்பு இணையம் மற்றும் கூகுள் பிளே ஸ்டோரில் இலவசமாகக் கிடைக்கும் என்று நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது, ஆனால் இலவச சேவையின் கால அளவைக் குறிப்பிடவில்லை.

Edtech ஒரு வணிகத்தில் வெற்றி பெற வாடிக்கையாளர் எளிய இணைப்பு, விநியோகம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அமேசான் நிறுவனத்தால் அனைத்தையும் வழங்க முடியும். அமேசான் மற்றும் பைஜூஸ் இரண்டும் போட்டிக்கு தயாராகிவிட்டன. பைஜூஸ் முதலீட்டாளர்களைச் சார்ந்தது. அமேசான் முதலீட்டாளர்களைச் சார்ந்து இல்லை என்று விளக்குகிறார்கள். கல்வி ஈ - வணிகம் எப்போதும் உடனடி லாபத்தைக் காட்ட வேண்டும் என்று கட்டாயமில்லை. நுகர்வோர் பணப்பையின் அதிக பங்கை நீண்டகால இலக்காகக் கொள்ள மெய்நிகர் வணிகக் கல்வி நகர்கிறது. இது ஏற்கனவே ஓவர் - தி - டாப் (OTT) பிளாட்பார்ம் ஸ்பேஸ், அமேசான் பிரைம் அல்லது Amazon Pantry உடன் மளிகை வணிகத்தில் செய்து வருகிறது.

மெய்நிகர் வணிகக்கல்வி கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் பெருநகரங்கள் மற்றும் அடுத்து இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள பள்ளி மாணவர்களை இலக்கு வைக்கிறது. பாடசாலைக்கல்வியைப் பூர்த்தி செய்தோருக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் அரசுப் பணிகளுக்குத் தயாராகும் வேட்பாளர்களைக் குறி வைத்து தங்கள் ஊடாடும் மெய்நிகர் பயிற்சி உள்ளடக்கத்தை அதிகரித்துள்ளன.

‘எங்கள் முதன்மை கவனம் உள்ளடக்க தரம், ஆழ்ந்த கற்றல் பகுப்பாய்வு மற்றும் மாணவர் அனுபவம் ஆகியவற்றில் உள்ளது’ என்று அமேசான் இந்தியாவின் கல்வி இயக்குநர் அமோல் குர்வாரா ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.




இந்தியன் வணிக ஆய்வு நிறுவனங்களின் அறிக்கையின்படி இந்திய எட்டெக் கல்வி வணிகம் 2019 இல் 55.3 கோடி டொலர்களிலிருந்து 2020 இல் மொத்தம் 222 கோடி டொலர் முதலீட்டைப் பெற்றன என்று குறிப்பிடுகிறது.

இந்தியாவில்கல்விச்சந்தையில் சுமார் 360 கோடி கற்கும் மாணவர்கள் இருக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் முதன்மையாக தனியார் பயிற்சி மற்றும் தேர்வுத் தயாரிப்புகளை உள்ளடக்கிய துணைக் கல்விக்காக இந்தியர்கள் $42 பில்லியன் செலவிட்டனர் என அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir

# விஸ்வச்சந்திரனைத் தாக்கிய மூன்று இராணுவத்தினர் கைது

சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது தாக்குதல் மேற்கொண்ட மூன்று இராணுவத்தினர் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினரால் மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில் காயமடைந்த ஊடகவியலாளர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாத்தளை மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு விஜயம்

(ந.லோகதயாளன்)

மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஸ் தலைமையில் சபையின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வருகை தந்தனர்.

யாழ்ப்பணம் மாநகர சபையின் செயற்பாடுகளை நேரில் அறிந்து கொள்ளும் வகையில் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை மாநகர சபையின் 20 உறுப்பினர்கள் இந்தப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

## நினைவேந்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது ஜனநாயக நாடு எனில் போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு உரித்துண்டு. அதை ஆயுதமுனையில் அடக்க முயல்வது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி. தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்றுமுன்தினம் அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டில் இன ரீதியில் – மத ரீதியில் – மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்றாம்கட்ட பைசர் பூஸ்டர் தடுப்பூசிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மண்டபம், நாவலடி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் செங்குந்தா இந்துக் கல்லூரி போன்றவற்றில் வைத்து இவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 62 ஆயிரத்து 520 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 422 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 29 ஆயிரத்து 662 ஆக அதிகரித்துள்ளது.

## ஊடகவியலாளர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தாக்குதலானது தனிநபர் மீதான தாக்குதலாக நாம் பார்க்கவில்லை. ஒட்டுமொத்த ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதலாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம்.

எனவே, குறித்த ஊடகவியலாளர் மீது தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்வதுடன் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் இந்த அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் – என்றார்.

## எந்நேரமும் நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

கொரோனாத் தொற்று உறுதியாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தால் நாட்டை முடக்க நேரிடலாம்.

எனினும், தற்போதைக்கு அவ்வாறான ஒரு தேவை ஏற்படவில்லை.

கொரோனாப் பரவுகை நிலைமை மோசமடையாதிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

நாட்டில் கொரோனா மரணங்களில் தளம்பல் நிலை காணப்படுகின்றது. அண்மைய நாள்களாக இந்த மரணங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகி வருகின்றது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஓமிகோர்ன் திரிபால் இலங்கைக்கு எவ்வாறான தாக்கம் ஏற்படும் என்பது குறித்து எதிர்வுகூறல்களைத் தற்போதைக்கு வெளியிட முடியாது.

தென்னாபிரிக்காவுடன் நேரடியான விமானப் போக்குவரத்துச் சேவை கிடையாது – என்றார்.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்து!

## இராணுவத்தினரின் அராஜகத்தைக் கண்டித்து முல்லைத்தீவு நகரில் நேற்று பெரும் போராட்டம்



(சண்முகம் தவசீலன்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று சுயாதீன ஊடகவியலாளரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று முல்லைத்தீவு நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சித்திரவதைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# செய்தியாளர் மீதான தாக்குதல்; தமிழ்த் தேசியக் கட்சி கண்டனம்



முள்ளிவாய்க்காலில் மாவீரர் நாளன்று செய்தியாளர் ஒருவர் இராணுவத்தினர் சிலரால் தாக்கப் பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சம்பவம் மனித உரிமைகளை குறிப்பாக ஊடகவியலாளர்களின் உரிமைகளை மதிக்கும் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீடு அற்றவர்கள் சிலருக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகளை வட பிராந்திய கட்டளைத் தளபதி கையளித்த அதே சந்தர்ப்பத்தில் இந்தத் தாக்குதல் சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட பிராந்திய இராணுவத் தளபதியின் கவனத்தை நாம் கோருகின்றோம்.

மேலும், இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை வட பிராந்திய கட்டளைத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் உறுதிப்படுத்த முன்வர வேண்டும் என்று நாம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றார். (இ)

# மட்டக்களப்பிலும் கண்டனப் போராட்டம்!



சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக்கண்டித்து மட்டக்களப்பில் நேற்று போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக அமையம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

'வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் நீதி கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம்' எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள், பல்சமய ஒன்றியங்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை!

## அமைச்சர் டக்ளஸ் அதிரடி



மக்களுக்கு பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் மீளாய்வுக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற வீதி விபத்துக்களை நிறுத்துவதற்கு எதிரான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடைபெறுகின்ற வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை சாரதிகளின் அக்கறையீனம் காரணமாகவே இடம்பெறுகின்றன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே, பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாகவே வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற வாள்வெட்டுப் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வகையில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்துவது தொடர்பாக யாரும் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

எமது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை களைவதற்கு எமது படையினரையும் எமது இராணுவத்தினரையும் பயன்படுத்துவதில் எந்தவிதமான தவறும் கிடையாது.

எனவே வீதி விபத்துக்களையும் சமூக விரோதச் செயற்பாடுகளையும் களைவதற்கு இன்று தொடக்கம் சிறப்பு வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

அதுதொடர்பான மேலதிக அனுமதிகள் எவையும் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா பரவல், தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள நிலைவரம், அனர்த்த முகாமைத்துவம், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான காணிகளில் வேளாண்மைகளை மேற்கொள்ளுதல், உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மாவட்டத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரி, பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# காஸ் சிலிண்டர்கள் வெடிப்பது போன்று அரசும் விரைவில் வெடித்துச் சிதறும்!

## கயந்த கருணாதிலக எம்.பி. ஆரூடம்



நாட்டில் காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுவதைப் போன்று இந்த அரசும் விரைவில் வெடித்துச் சிதறும் என்று முன்னாள் காணி அமைச்சரும், தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் 75 ஆண்டுகளாக அந்த மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அரசு வெடித்துச் சிதறுவதற்குள் அதனைத் தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர்,

மேலும் பேசுகையில் –

வடக்கு, கிழக்கில் இளைஞர்களையும் தேசிய விவசாயத்துறையில் இணைத்துக்கொள்ள அவர்களுக்குத் தேவையான நிலத்தைப் பெற்றுக்கொடுக்க மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக்கொண்டுள்ளேன் என காணி அமைச்சர் அண்மையில் கூறினார்.

வடக்கு, கிழக்கில் 40 கிராமங்களுக்கு அதிகமான பகுதிகளில் 75 ஆண்டுகளாக அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனை நானும் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தேன். அதேபோல் அவர்களின் காணிகளுக்கான உறுதிப்பத்திரத்தை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களின் நிலங்களை சட்ட ரீதியாகப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எனினும், சட்ட ரீதியில் பல இழுத்தடிப்புகள் இடம்பெறுகின்றமையால் அவர்களுக்கு உரிய நிலம் வழங்கப்படாது, நிலம் பாவிக்கப்படாது கைவிடப்பட்டுள்ளது. தேசிய காணி கொள்கை ஒன்றை உருவாக்கி சகல காணிப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் இந்த அரசிடம் உள்ளதா என்ற கேள்வியைக் கேட்க வேண்டியுள்ளது.

நான் காணி அமைச்சராக இருந்த காலத்தில் பல வேலைத்திட்டங்களைக் கொண்டு வந்தேன். அதேபோல் காணி சட்டத்தில் பல திருத்தங்களைக் கொண்டு வந்தோம். சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தபோதும் ஆட்சி மாற்றத்துடன் அவை நிறுத்தப்பட்டுவிட்டன .

மக்களின் காணிப்பிரச்சினைக்கு முறையான தீர்வுகளை வழங்குங்கள். யார் ஆட்சியில் இருந்தாலும் மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்க வேண்டும். அதனையே நாமும் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் மலையக மக்கள் பாரிய நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர்.

இதற்கு அரசின் முட்டாள்தனமான தீர்மானங்களே காரணம். மலையகத் தேயிலைத் தோட்டங்களைத் தனியார்மயப்படுத்தி, நிறுவனங்களுக்கு வேறு காரணிகளுக்காக விற்கும் நடவடிக்கை காரணமாக மலையகத்தைச் சார்ந்த எமது மக்கள் துன்பப்படுகின்றனர்.

சிறு தேயிலைத் தோட்டங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் அடுத்த ஆண்டில் பாரிய நெருக்கடி நிலையொன்று நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும். காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுவதை போன்று இந்த அரசும் வெடிக்கும் நிலையில் உள்ளது.

ஒவ்வொரு நாளும் காலையில் அரசுக்குள் ஏற்பட்டு வரும் வெடிப்பைப் பார்க்கையில் அவ்வாறே நினைக்கத் தோன்றுகின்றது. இன்னும் குறுகிய காலமே இந்த அரசு இருக்கப்போகின்றது. அதற்குள் மக்களின் காணிப் பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்க வேண்டும். – என்றார்.

# யானையின் வாலைப் பிடித்ததே சு.கவின் வீழ்ச்சிக்கு காரணம்!

யானையின் வாலைப் பிடித்து தொங்குவது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தவறான முடிவு காரணமாக அந்தக் கட்சி தற்போது வீழ்ச்சியான நிலைமைக்குள் வீழ்ந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழந்து போன கட்சியின் ஆதரவாளர்களை மீண்டும் கட்சியின் பக்கம் நோக்கி ஈர்ப்பதற்காக பொதுஜன பெரமுன மீது விமர்சனங்களை முன்வைப்பதில் பயனில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் உண்மையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. கட்சி வீழ்ந்துள்ள நிலைமையை அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

முக்கியமாக அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றும் போதே மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தத் தவறையும் செய்யவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் பொதுஜன பெரமுனவை சேர்ந்த சிலருடன் மாத்திரமே பிரச்சினை உள்ளது எனவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிலர் எமது கட்சியின் தலைவருக்கு எதிராக வெறுமனே தாக்குதல் தொடுக்கின்றனர். அவற்றை பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதால், பதிலளிக்க கட்சியினருக்கு அனுமதியுள்ளது. எவ்வாறாயினும் அந்தப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையல்ல. அவற்றைக் கூடிய விரைவில் தீர்த்துக்கொள்வோம் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

# கட்டடத்திலிருந்து தவறி விழுந்து கடற்படை வீரர் கொழும்பில் சாவு

கொழும்பு, நவ. 29

கொழும்பு கோட்டை பரோன் ஜயதிலக மாவத்தையில் உள்ள கபூர் கட்டடத்தின் மேல் மாடியில் இருந்து விழுந்து கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டடத்தை சீர் செய்து கொண்டிருந்த கடற்படை வீரர் ஒருவர் கட்டடத்தில் இருந்து தவறி விழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கடற்படை பொறியியலாளர்களால் குறித்த கட்டடத்தின் புதுப்பிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் பதுளை கந்தகெட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய கடற்படை அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# எரிவாயு சிலிண்டர் விபத்துகள் குறித்து உடனடி விசாரனை கோரி முறைப்பாடு

எரிவாயு சிலிண்டர் விபத்துகள் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என கோரி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய சுயதொழில் சம்மேளனத்தால் இவ்வாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளளவை 18 லீற்றராக குறைக்கும் போதே, 407 ரூபா வரை மோசடி இடம்பெறுவதாக தாம் குற்றம் சுமத்தினேன் என ஐக்கிய தேசிய சுயதொழில் வியாபாரிகள் சங்க தலைவர் பிரதீப் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2021 இல் வெளியிடப்பெற்றது.